செ.வெ.எண். 68/பிப்ரவரி தேதி : 26.02.2017

# தருமபுரி மாவட்டம்

## நல்லம்பள்ளி, தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 2139 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மற்றும் ரூ. 1 கோடியே 21 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கினார்.







நல்லம்பள்ளி, தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 2139 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மற்றும் ரூ. 1 கோடியே 21 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் இன்று (26.02.2017) வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் உணவு பொருள் வழங்கல் துறையின் சார்பில் தருமபுரி வட்டத்திற்குட்பட்ட 300 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், நல்லம்பள்ளி வட்டத்திற்குட்பட்ட 495 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், பென்னாகரம் வட்டத்திற்குட்பட்ட 300 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், பாலக்கோடு வட்டத்திற்குட்பட்ட 496 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், காரிமங்கம் வட்டத்திற்குட்பட்ட 523 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் என மொத்தம் 2139 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதவியேற்றவுடன் முதற்கட்டமாக 8000 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 2-ம் கட்டமாக 2000 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. நல்லம்பள்ளி, தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம் ஆகிய 5 ஒன்றியங்களுக்குட்பட்ட குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல் வேளாண் உபகரண பொருட்கள் (ரோட்டாவேட்டர்) அரசு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்ப அட்டை என்பது மிக அவசியமான ஒன்று. அதனால் அம்மாவின் அரசானது பொதுமக்கள் பயன்பெறும்/ வகையில் தருமபுரி மாவட்டத்தில் விண்ணப்பித்த தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களை தேர்வு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதனால் அனைவரும் மாவட்ட வழங்கல் அலுவலரை சந்தித்து சரியான முறையில் விண்ணப்பித்து பயனடைய முன் வர வேண்டும்.

அதேபோல் அம்மாவின் அரசானது தாலிக்கு தங்கம் 4 கிராமாக இருந்ததை தற்போது 8 கிராம உயர்த்தி வழங்கி வருகிறது. அதுமட்டுமில்லாமல் படித்த ஏழை எளிய பெண்களுக்கு திருமண நிதியுதவியாக 10 மற்றும் 12 ம் படித்தவர்களுக்கு ரூ. 25 ஆயிரமும், பட்டம், பட்டயம் படித்தவர்களுக்கு ரூ. 50 ஆயிரமும் வழங்கி வருகிறது. அம்மா பரிசு பெட்டகம், கர்ப்பிணி பெண்களுக்கு மகப்பேறு நிதியுதவியாக ரூ. 12 ஆயிரம் வழங்கி வந்ததை தற்போது ரூ. 6 ஆயிரம் உயர்த்தி ரூ. 18 ஆயிரமாக வழங்கப்பட்டு வருகிறது. வேளாண் பெருமக்களின் விவசாய கடன்களை தள்ளுபடி செய்தும், 100 யூனிட் மின்சாரம் கட்டணம் ஏதுமில்லாமல் வீடுகளுக்கு வழங்கியும், நெசவாளர்களுக்கு கட்டணமில்லாமல் வழங்கப்படும் மின்சாரத்தை 200 யூனிட்டுகள் எனவும், விசைத்தறிக்கு கட்டணமில்லாமல் வழங்கிய மின்சாரத்தை 750 யூனிட்டுகளாக உயர்த்தியும் வழங்கி வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி தந்துள்ளார்கள். வேலைக்கு செல்லும் மகளிருக்கு ஸ்கூட்டி வாங்குவதற்கு 20 சதவீதம் மானியம் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டபடி தற்போது தமிழக அரசு ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் தொகுப்பு வீடுகள் பயனாளிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல்128 கோடி மதிப்பில் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம் அம்மாவின் அரசு நிதி ஒதுக்கீடு செய்து பொமக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் நமது மாவட்டத்தில் வெப்ப காலம் மற்றும் வறட்சி நிலவுவதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும், அம்மாவின் அரசு தான் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு வறட்சிக்கென நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து தற்பொழுதும் 140 வருடங்களில் இல்லாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்த சூழலை தவிர்க்கும் விதமாக விவசாயிகளுக்கு தற்போது அமைந்துள்ள முதல்வர் அவர்கள் ரூ. 2247 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணைபிறப்பித்துள்ளார். இந்த வறட்சி நிதியானது உடனடியாக அமலாக்கப்படும் எனவும், பொதுமக்கள் தங்களுக்கு தேவையான உழவர் பாதுகாப்பு திட்டம், சாதி சான்றிதழ், பட்டா சிட்டா மாறுதல் வருமானம், இருப்பிடச்சான்றிதழ்கள் பெற அந்தந்த பகுதிகளில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தொடர்புகொள்ளலாம்.

தமிழக அரசு அனைத்து மாவட்டங்களிலும் நியாய விலைக்கடை பணிகளைக் கணினி மயமாக்கும் திட்டத்தினை வடிவமைத்து ஒவ்வொரு நியாய விலைக்கடைக்கும் ஒரு கணினி செயலி (Point of sale Device) வழங்கப்பட்டுள்ளது. ரூ. 44 அயிரம் மதிப்பிலான கணினி செயலி (PSO) நமது மாவட்டத்தில் உள்ள 1,047 நியாய விலைக்கடைகளுக்கும் ரூ. 4.60 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் விடுதலின்றி சிந்தாமல் சிதறாமல் உணவுப்பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இக்கணினி செயலியின் பயனாக அங்காடியில் பொருட்கள் இருப்பு விவரம், அங்காடி திறக்கப்பட்டதா என்பது போன்ற விவரங்களை குடும்ப அட்டைதாரர்கள் அறியவும் வாங்கிய பொருள்களின் விவரங்களை தமது கைப்பேசி குறுஞ்செய்தியின் மூலம் தெரிந்துகொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் இடைவிடாது இயங்கி வரும் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 என்ற எண்களுக்கு மற்றும் மாவட்ட நிர்வாகத்தில் அனைத்து அலுவலர்களுடைய தொலைபேசி எண்கள், கைபேசி எண்கள் ஆகியவை செயலியில் உள்ளன. பொதுமக்கள் அவசர காலத்தில் இந்த செயலியை பயன்படுத்தி தங்களது பகுதிகளில் உள்ள குறைகளை அவசர கால உதவி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், மாவட்ட வழங்கல் அலுவலர் (பொ) திருமதி. மல்லிகா, பாலக்கோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு. கே.வி. அரங்கநாதன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு. டி.ஆர். அன்பழகன், மத்தியக்கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. வேலுமணி, தருமபுரி மாவட்ட கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத் தலைவர் திரு. எம். பழனிசாமி, ஜெர்த்தலாவ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. வீரமணி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.